செ.வெ.எண்:05 நாள்:02.02.2019

## அரியலூர் மாவட்டத்தில் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் மேல்நிலை செயல்முறைத் தேர்வு 2019 மையத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் மேல்நிலை செயல் முறைத் தேர்வு 2019 மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் இன்று (02.02.2019) நேரில் பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 41 மையங்களில் 4272 மாணவ, மாணவியர்கள் செய்முறை தேர்வு முதல் சுற்று 01.02.2019 முதல் 06.02.2019 முடிய நடைப்பெற்று வருகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்ர்ாகள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) சத்தியநாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி மற்றும் ஆசிரியர்கள், அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**